# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*


<u>வழக்கு எண்.23486/விசாரணை/09</u>

<u>விசாரணை நாள் 27.01..2010</u>

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. எஸ்.கே. சந்திரசேகரன்<br>க.எண்.10–1, மனை எண்.82<br>சந்தான இல்லம், விவேகானந்தர் தெரு<br>ஐயப்பா நகர், கே.கே. நகர் அஞ்சல்<br>திருச்சி – 620 021. |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>தொடக்கக் கல்வி இயக்குநரகம்<br>கல்லூரி சாலை<br>சென்னை – 6. |

---

இவ்வாணையத்தில் இன்று (27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. எஸ்.கே. சந்திரசேகரன், பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு. ஜே. சுதர்சன், துணை இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநரகம், சென்னை – 6 வந்திருந்தனர்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 06.04.09 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு (தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6) அனுப்பிய மனுவில் கீழ்க்கண்ட இரண்டு இனங்களுக்கு (1) மருத்துவ நல நிதி பெற தளர்வாணை கேட்டு உரிய அலுவலருக்கு சென்னை தொடக்கக்கல்வி இயக்குநர் அலுவலகத்தில் இருந்து பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளதா. அனுப்பி இருந்தால் அதன் நகல் ஒன்றை எனது தற்போதைய வீட்டு முகவரிக்கு உரிய காலத்திற்குள் அனுப்பிடவும் (2) அரசு ஆணை எண்.18 தேதி 09.01.1992ன்படி மருத்துவ நல நிதி உதவி பெற மேற்கொண்டு எத்தகைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற தகவல்களை வழங்குமாறு கோரியிருந்தார். சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் தகவல் பெறாததால், மனுதாரர் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 17.06.09 அன்று முதல் மேல்முறையீடு

செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 01.7.09 அன்று மனுதாரருக்கு கடிதம் எழுதியுள்ளார். மனுதாரர் தான் கோரிய இரண்டு தகவல்களுக்கும் முழுமையான தகவல்கள் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்தும் மற்றும் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 18.09.09 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு சட்டப்பிரிவு 18(3)ன் கீழ் இன்றைய விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மருத்துவ நல நிதி கோரும் விண்ணப்பத்தை சிறப்பு நிகழ்வாக கருதி அரசின் தளர்வாணை வேண்டி கருத்துருவை 22.12.09 அன்று அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வி துறை, தலைமைச் செயலகம், சென்னை – 9க்கு அனுப்பியுள்ளதாகவும், அதன் நகலை மனுதாரருக்கும் மற்றும் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலருக்கும் அனுப்பியுள்ளதாக இவ்வாணையத்தின் முன் தெரிவித்தார். விசாரணைக்கு வந்திருந்த மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பிய கருத்துரு தனக்கும், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகத்துக்கும் கிடைக்கவில்லையென்று இவ்வாணையத்தின் முன் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர் அரசுக்கு அனுப்பிய கருத்துருவின் நகலை இவ்வாணையத்தின் முன் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலை இவ்வாணையத்திற்கு சமர்ப்பித்தார். மேலும், மனுதாரருக்கு வழங்கிய நகலை மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைக்குமாறு இவ்வாணையம் உத்தரவிடுகிறது. மனுதாரர் கோரிய தகவல்களை அவருக்கு பொதுத் தகவல் அலுவலர் வழங்கியதன் அடிப்படையில் இவ்வழக்கில் மேலும் விசாரிப்பதற்கு ஏதுமில்லை எனக் கருதி இவ்வழக்கு இத்துடன் முற்றுப் பெறுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 03.02.2010
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவிப் பதிவாளர்.

<u>வழக்கு எண்.23486/09</u>
பொதுத் தகவல் அலுவலர்
தொடக்கக் கல்வி இயக்குநரகம்
கல்லூரி சாலை
சென்னை – 6.

திரு. எஸ்.கே. சந்திரசேகரன்
க.எண்.10–1, மனை எண்.82
சந்தான இல்லம், விவேகானந்தர் தெரு
ஐயப்பா நகர், கே.கே. நகர் அஞ்சல்
திருச்சி – 620 021.